ந.க. எண். அ1–63/2010 குலசேகரம் தேர்வுநிலை பேரூராட்சி

நாள் 25.06.2010.

## அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010 – 2011
## மறு ஒப்புநோக்கு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு

1. கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரம் பேரூராட்சியில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010 – 2011 ன் கீழ் பணிகளை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் தகுதியான ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பகிரங்கமாக பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தக்காரர்கள் மத்திய அல்லது மாநில அல்லது மத்திய அரசு மாநில அரசு சார்ந்த நிறுவனங்களிலிருந்து பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும். மேலும் ஒப்பந்தக்காரர்கள் குறைந்த பட்ச தகுதியுடையவகுப்பு 2 வது நிலை ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தங்கள் பெறப்படும்.

2. குலசேகரம் பேரூராட்சியில் கீழ் கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு ஒப்பந்தக்காரர்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளிகளை இப்பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

3. பணிகளுக்குரிய ஒப்பந்த படிவங்களை 08.07.2010 வரை உள்ள வேலைநாட்களில் அலுவலக நேரத்தில் உரிய தொகையினை குலசேகரம் பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி அல்லது செயல் அலுவலர் குலசேகரம் பேரூராட்சி என்ற முகவரிக்கு வங்கி வரைவோலை அனுப்பி பெற்று கொள்ளலாம். ஒப்பந்தப்படிவங்களை பதிவு தபால் மூலமாகவோ அல்லது விரைவு தபால் மூலமாகவோ பெற விரும்புவோர் உரிய தொகைக்கு மேல் கூடுதலாக ரூ.200/– செலுத்த வேண்டும். தபால் வழி தாமதங்களுக்கு குலசேகரம் பேரூராட்சி செயல் அலுவலர் பொறுப்பேற்க இயலாது.

4. ஒவ்வொரு பணிகளுக்கும் அதன் எதிரே குறிப்பிட்டுள்ள டேவணித்தொகையை ரொக்கமாகவோ அல்லது வரைவோலையாகவோ செயல் அலுவலர் குலசேகரம் பேரூராட்சி என்ற முகவரிக்கு செலுத்தப்பட வேண்டும்.

5. ஒப்பந்தப்புள்ளிகளை குலசேகரம் பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ 09.07.2010 வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை குலசேகரம் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் வருகை தந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் அன்றைய தினம் மாலை 3.30 மணிக்கு திறக்கப்படும் ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு அன்றைய தினம் திறக்கப்படும்.

6. இதர விபரங்களை ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்த நமூனா | ஒப்பந்த வைப்புத் தொகை | ஒப்பந்த நமுனா பெற கடைசி நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | குலசேகரம் பேரூராட்சிக்குட்பட்ட குலசேகரம் பேரூராட்சிக்கு சொந்தமான பொது சந்தையில் வணிக வளாகம் அமைத்தல் | 20.00 | 6760 | 40000 | 08.07.2010 |

### சிறப்பு நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்கள் அவர்களின் பெயரில் கட்டாயமாக கடந்த 5 ஆண்டுகளில் அரசு துறையில் 2004 – 2005 முதல் 2009 – 2010 வரை குறைந்த பட்சம் இரண்டு நிதி ஆண்டுகளில் வருடாந்திர நிதி செயல் திறன் தற்போது கேட்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு இரண்டரை மடங்கு அளவிற்கு .கூடுதலாக கட்டுமான பொறியியல் பணிகள் செய்திருக்கப்பட வேண்டும்.

2. மேற்கண்ட பணிகளுக்கு தேவைப்படும் அனைத்து பொருள்களையும் ஒப்பந்தக்காரர்கள் தங்களது சொந்தப்பொறுப்பில் தரம் மற்றும் அளவு நிாணயிக்கப்பட்ட அளவுகோலுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும். தரத்தை குறித்த தேவையான சான்று சமர்ப்பிக்க வேண்டும்.

3. ஒப்பந்தக்காரர்கள் கடந்த 5 ஆண்டுகளில் செய்து முடித்த பணி விவரங்களை ஆண்டு வாரியாக தாக்கல் செய்வதோடு ஏற்கனவே பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்படாமல் உள்ள விவரங்களை தாக்கல் செய்யப்பட வேண்டும்.

4. அமைக்கப்படும் பணிகள் ஒப்பந்தக்காரர்கள் பணியினை முடிக்கும் நாளிலிருந்து ஒரு வருடம் முடியும் வரையில் ஏற்படும் அனைத்து பராமரிப்பு பணிகளையும் தன் சொந்த செலவிலேயே மேற்கொள்ளுதல் வேண்டும். கூடுதல் வைப்புத்தொகை மேற்படி மதிப்பீட்டில் 5% செலுத்தப்பட வேண்டும்.

5. இதர விவரங்களை ஒப்பந்தப்புள்ளி நமுனாவிலிருந்து தெரிந்து கொள்ளலாம் அல்லது அலுவலக நேரங்களில் பேரூராட்சி பொருளாளரின் ஆலோசனைகளைப் பெறலாம்.

6. ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு மன்ற ஒப்புதல் பெற்ற பின்னரே வேலை உத்தரவு ஆணை வழங்கப்படும்.

7. மேற்கண்ட பணிகள் நடைபெறும் போது சம்பந்தப்பட்ட உயர் அலுவலர்களால் ஆய்வு செய்யப்படும்.

8. பணிகள் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் முடிக்கப்பட வேண்டும் தவறும் பட்சம் அபராத தொகை விதிக்கப்படும்.

9. இதர விவரங்களை பேரூராட்சியின் இணையதளம் http://townpanchayats.tn.gov.in/ tender என்பதில் தெரிந்துகொள்ளலாம்.

**செயல் அலுவலர்**
**குலசேகரம் தேர்வு நிலை பேரூராட்சி**

பெறுநர்

இப்பேரூராட்சியில் பதிவு செய்யப்பட்ட
தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரா்

நகல்

1) உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்)
நாகர்கோவில்– தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

2)உதவி செயற்பொறியாளர் (பேரூராட்சிகள்),
நாகர்கோவில் – அவர்கள் தகவலுக்காக

3) இளநிலை பொறியாளர் (பேரூராட்சிகள்), திற்பரப்பு

4) திருவட்டார் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து பேரூராட்சிகளுக்கும்

5) கிராம அலுவலகம் (பொன்மனை, திருவட்டார், அருவிக்கரை)

6) குலசேகரம் பேரூராட்சி, தலைவர் அவர்கள் மேஜைக்கு.